# I Semester B.Com. Examination, March/April 2023
## (NEP – 2021-22 and Onwards) (Freshers+Repeaters)
## TAMIL LANGUAGE (Paper – I) (Part – I)

Time : 2½ Hours Max. Marks : 60

### SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய நூல்

1) சுடுமணல் 2) சப்பரம்

3) மருதுபாண்டியன் 4) எட்டுத்திக்கும்

2) தமிழில் உள்ள மொத்த எழுத்துகள்

1) 216 2) 237

3) 246 4) 247

3) குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

1) 400 2) 401

3) 300 4) 301

4) சிறுபாணாற்றுப் படையின் ஆசிரியர்

1) நல்லூர் நத்தத்தனார் 2) நப்பூதனார்

3) நல்லந்துவனார் 4) நக்கீரனார்

5) திருக்குறள் இத்தனைப் பிரிவுகளைக் கொண்டது

1) ஏழு 2) நான்கு

3) மூன்று 4) ஐந்து

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1) எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழைய கொடியோர் நாவே

2) நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறடி
கல்லா இளைஞர் மெல்லத் தைவர

3) நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்

4) கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப, அவர்தேர் சென்றஆறே

5) அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்

6) அவரு இந்தப் புலியை அரை நாழியிலே
கொன்று தூக்கி எறிஞ்சிட்டாரு

7) இப்போதே நமது அரண்மனைச் சொத்துக்களையும்
ஆயுதங்களையும் அந்த ரகசியப் பாதை வழியாக
வெளியேற்றிவிடுங்கள்

8) எந்தக் காளையார் கோயில் போரில் நாம்
முதன் முதல் தோற்க நேர்ந்ததோ, அதே
காட்டுக்குள்ளே, இந்த வெள்ளையர் கும்பலை
நான் சணக்காடு பிணக்காடாக வெட்டித்
தள்ளுகிறேன்

## SECTION – B

III. எவையேனும் ஐந்திற்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) வினா எழுத்துகளைச் சான்றுடன் எழுதுக.

2) சார்பெழுத்து என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

3) இன்னிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.

4) மொழியின் இறுதியில் வரும் எழுத்துகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

5) மதுரையின் மாண்பு குறித்து சிறுபாணாற்றுப் படை கூறுவன யாவை ?

6) இரவுக்குறியில் வந்து நீங்கும், தலைவனைத் தோழி எவ்வாறு திருமணத்திற்கு வற்புறுத்துகிறாள் ?

7) வேலுநாச்சியாரின் பாத்திரப் படைப்பை மருது பாண்டியன் நாடகம் வழி விளக்குக.

8) சிவகங்கை மக்களின் நாட்டுப் பற்றை புலப்படுத்துக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×5=20)

1) தலைவனுக்குத் தோழி வாயில் நேர்ந்தமை குறித்து குறுந்தொகை கூறுவனவற்றை விளக்குக.

2) கல்வியின் இன்றியமையாமையை திருக்குறள் வழிநின்று புலப்படுத்துக.

3) கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பினைக் காட்சிப்படுத்துக.

4) சின்ன மருதுவின் வீரம் குறித்து விளக்குக.

5) கலெக்டர் லூஷிங்டனின் பாத்திரப் படைப்பை ஆராய்க.

6) மருது பாண்டியர்களின் போர்த்தந்திரங்கள் குறித்து விளக்குக.